வெலிகெபொல பிரதேச சபையி - 2023

----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகெபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து வெலிகெபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடம்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 222,600 தொகையான மூலதனச் செலவுகள் செயற்பாட்டுச் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | அடுத்துவரும் ஆண்டின் போது மூலதனமாக்குவேன். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் 0.9371 ஹெக்டயர் அளவான 04 காணிகளும் ரூபா 625,000 தொகையான ஒரு கெப் வாகனமும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ரூபா 25,433,296 பெறுமதியான மோட்டார் வாகனங்களானது இயந்திர மற்றும் உபகரண கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371 (5) இன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் | தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு வரையான காலத்தில் 14 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 828,505 முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571 (2) இன் பிரகாரம் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலம் தொடர்பாக ரூபா 1,220,885 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் முறையாக அகற்றப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருட இறுதியிலும் நிறுவனத்தின் வைப்புக்களை முறைப்படியாக அகற்றுதல் இடம்பெற்று வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4,630,333 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவுகள் ரூபா 5,281,783 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 11,793,304 | 12,465,214 | 12,109,948 | 5,542,701 | 9,383,172 | 8,011,088 | 8,278,319 | 5,262,269 |
| வாடகை | 9,150,546 | 10,091,636 | 10,279,253 | 91,797 | 4,845,216 | 4,564,728 | 4,508,644 | 158,963 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,400,500 | 1,540,350 | 1,660,350 | - | 1,598,250 | 1,218,125 | 1,218,125 | - |
| ஏனைய வருமானம் | 3,496,500 | 2,347,569 | 2,407,108 | - | 4,591,300 | 1,350,834 | 1,350,834 | - |
| மொத்தம் | 25,840,850 | 26,444,769 | 26,456,659 | 5,634,498 | 20,417,938 | 15,144,775 | 15,355,922 | 5,421,232 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,868,095 தொகையான நிலுவை வீதவரி மீதியில் 05 ஆண்டுகளை மிகைத்த பழைய ரூபா 1,467,796 மீதி காணப்பட்டது. | இப்பணத்தை அறவீடு செய்வதற்காக நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களைப் போல சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 48 விளம்பர பலகைகளிலிருந்து 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 198,600 அறவிட வேண்டியிருந்தது. | உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 4,413,445 செலவு செய்து 2022 ஆம் ஆண்டில் வேலை முடிவுறுத்தப்பட்ட கழிவப் பொருள் நிலையத்தில் சேதனப் பசளை தயாரிக்கும் நடவடிக்கை 2023 திசெம்பர் வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 02 தொன்கள் அளவிலான உக்குகின்ற கழிவுப் பொருட்கள் குழிவெட்டி அப்புறப்படுத்தப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் பெற்ற ரூபா 950,000 தொகையான பெலர் இயந்திரமும் மின்சார வழங்கல் இல்லாமையால் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் செயற்பாட்டினை முடிவுறுத்தி சேதனப் பசளை தயாரிப்பினை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | முறைப்படியாக கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உணவுச்சாலையின் ஊழியர்களுக்கு ரூபா 336,000 சராசரி மாதாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தும் அதன் மாதாந்த சராசரி வருமானம் ரூபா 370,000 ஆகும். முறைப்படியாக ஆவணங்கள் | தற்பொழுது வருமானம் அறவீடு செய்தலானது தெளிவாக கோவை செய்யப்பட்டு ஆவணங்கள் பேணப்படுகின்றன. | முறைப்படியாக ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியதுடன் வருமானங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படாமையால் பெற்ற வருமானத்தின் சரியான தன்மை சிக்கலுடையதாகும். | | வேண்டும். |
| (ஆ) | 2159 நீர்ப் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றது என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஈடுபடுத்தப்பட்ட 165 நீர் மீற்றர்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதனால் வாடிக்கையாளர்களிடமிருந்து நிலையான கட்டணம் அறவிடப்பட்டு வந்திருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டு நீர் பாவனையாளர்களிடமிருந்து 2024 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவையான நீர் கட்டணம் ரூபா 1,433,323 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீரை சுத்தீகரிப்பதற்கு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டது. நீருடன் சேற்று மண் கலந்துள்ளதனால் புதிய மீற்றர்கள் பொருத்தினாலும் அந்த மீற்றர்களும் விரைவாக செயற்பாடற்றுவிடும். | நீரினை சுத்திகரித்து பகிர்ந்தளிப்பதற்கும் நிலுவைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்பாடற்று காணப்பட்டுள்ள உள்ளக தொலைபேசி முறைமையை நீக்குவதற்கு 2023 மே மாதத்தில் எடுத்த தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கு 2024 பெப்ரவரி வரை காலங்கடந்துள்ளதனால் அக்காலத்தில் செலுத்திய ரூபா 128,322 நிரந்தர கட்டணம் ஒரு விளைவற்ற செலவாகும். | 2024 மார்ச் மாதமளவில் உள்ளக தொலைபேசி முறைமை துண்டிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பணம் மிகவும் சிக்கனமாக செலவு செய்யப்படுதல் வேண்டும். |

**3.3 வாகனப் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்ட 04 வாகனங்களின் உரிமை பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | 03 வாகனங்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமை பெறுப்பேற்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 06 பழுதடைந்த வாகனங்களை 2024 எப்ரல் மாதம் வரை திருத்தம் செய்தல் அல்லது கைதவிர்ப்புச் செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவற்றில் 2014 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்வதற்கு ஒப்படைக்கப்பட்ட உழவு இயந்திரம் இன்று வரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்ப்புச் செய்வதற்காக ஒரு குழுவினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 05/2020 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |